**கவனிக்க.**– *2019.05.31 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2127 - 2019 ජූනි මස 07 වැනි සිකුරාදා - 2019.06.07

*2127 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1062 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1063 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2019, யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, யூன் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
கொழும்பு 8,
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1061- B81530 - 5,403 (2019/06)

# மாகாணசபை அறிவித்தல்கள்

## வடமேல் மாகாண மாகாண சபை

கூட்டுறவு சேவை ஆணைக்குழு - வடமேல் மாகாணம்
ஒழுக்காற்று நடவடிக்கை உத்தியோகத்தர் குழு

வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 1995 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கத்திற்கான வடமேல் மாகாண கூட்டுறவு சேவை ஆணைக்குழுவின் சாசனத்தின் 11 (i) (உ) மற்றும் (ஊ) பிரிவு மற்றும் 1997.09.19 ஆந் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திருத்த கட்டளைத் தொடரின் 9 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள 96 ஆம் பிரிவிற்கான திருத்தத்திற்கமைய ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி,

வடமேல் மாகாண கூட்டுறவு ஆணைக்குழுவின் ஒழுக்காற்று நடவடிக்கை உத்தியோகத்தர் குழுவிற்காக விண்ணப்பப்படிவம் கோரப்பட்டு நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் கீழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது பற்றி இத்துடன் தெரிவித்துக் கொள்வதுடன், 2016.02.26 ஆந் திகதி இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் iv (அ) ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்ட 15 பேர்களை கொண்ட ஒழுக்காற்று நடவடிக்கைக் குழுவினை இத்துடன் இரத்து செய்வதாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

| தொ. இல. | பெயர் | முகவரி |
|---|---|---|
| 01 | திரு. கே.ஏ. பிரேமதாச | இல. 123 பியுஸ்வத்த, மில்லவ, குருநாகல் |
| 02 | திரு. பர்னாட் லியனகே | சமாதி, சிலாபம் |
| 03 | திரு. எஸ்.ஏ. எதிரிசிங்ஹ | இல. 167, ஹலுகம, பொதுஹெர |
| 04 | திரு. எஸ்.ஏ. சுனில் ஜயதிலக | இல. 75, ஜயரம்ப, அம்பகொலவெவ, அம்பன்பொல |
| 05 | திரு. பீ.எம்.என்.கே. பாலசூரிய | கின்கேரிய பாலத்திற்கு அருகில், வதாகட |
| 06 | திரு. டபிள்யு. ஏ.டீ.எச். குலரத்ன | இல. 23, உடுமுல்ல, தொரடியாவ |
| 07 | திரு. எச்.பி.ஜீ. அஜித் குமார | கும்புக்வெவ, தனக்னேவ |
| 08 | திரு. எச். ஆர். எம். யூ. திலகரத்ன | இல. 92, பிலாகடுமுல்ல, நாத்தண்டிய |
| 09 | திரு. ஏ. தர்மவங்ச | தம்பெலெஸ்ஸ, நாரம்மல |
| 10 | திருமதி பி.எச்.எஸ்.புஸ்பிகா சமந்தி | கி.மீ.8 கம்பம், தல்கஹகமவத்த, பமுணாகொடுவ |
| 11 | திரு. ஆர்.பி.ஜீ. பியதிஸ்ஸ | இல. 4/286, பாடசாலை அருகில், ஹந்துகல |
| 12 | திரு. டபிள்யு. ஏ. ஜயரத்ன | இல. 6/14, நிஸ்சங்க மாவத்தை, குருநாகல் |
| 13 | திரு. டபிள்யு. ஜீ. சந்திரரத்ன | இல. 497, கைனேக, கைக்காவல |
| 14 | திரு. எஸ்.டீ. செல்டன் லீலாரத்ன | இல. 31/3, ஜயசக்தி செவன, கஹடவில, பொதுவடவன |
| 15 | திரு. டபிள்யு. ஆர்.எம். சுமனவீர | கெலேகம வெவ பாதை, கெலேகம, அடிப்பல |
| 16 | திருமதி கே.ஜீ. பண்டாரமெனிகே | இலக்கம் 82, 7 ஆம் பகுதி, உயந்தன, குருநாகல் |
| 17 | திரு. ஆர்.பி. நிமல்சிறி | பன்சல் பாதை, மதுரன்குளிய |
| 18 | திரு. கே. எம். ஜயதிலக | எல்வத்த, வந்துராகல, குருநாகல் |
| 19 | திரு. டபிள்யு. எம்.சோமரத்ன வீரசூரிய | கொரொக்கஸ்தெணிய, அலவ்வ, மஹகெதர, ஏகல்ல |
| 20 | திரு. டி.எம். ஆரியரத்ன பண்டா | இல. 51/2, ஒலுபெலியாவ, போயகனே |
| 21 | திரு. பீ.ஏ. சிறிவர்தன | இல. 79, பு/வீரபுர, சாலியவெவ சந்தி |
| 22 | திரு. எம்.எம். சரத் பிரேமசந்திர | இல. 87, கோந்துருவாபொல, நக்காவத்த |
| 23 | திரு. பி.பி.டீ.எஸ். அஜித் சந்திர குமார | கந்தேகெதர, குளி/வெவகம |
| 24 | திரு. ஏ.எம். கிரேஷன் அசோகா | இல. 78 பீ, சாந்த செபஸ்தியன் மாவத்தை, பட்டியகம, மாதம்பே |
| 25 | திரு. பீ.எம்.ஏ. மொஹான் த சில்வா | பஹல வந்துராகல, மல்கடுவாவ, குருநாகல் |
| 26 | திரு. டீ.எஸ். தேசப்பிரிய வீரவங்ச | இல. 54, சீகரிஉயன, நவ நகரம், மாதம்பே |
| 27 | திரு. ஆர்.டீ. சந்தரத்ன | 16 ஆம் ஒழுங்கை, என்.எம். அப்புஹாமி மாவத்தை, கெபல்லவ, உஹுமீய |

| தொ. | பெயர் | முகவரி |
|---|---|---|
| 28 | திரு. எச்.பி.எம்.எஸ்.டீ. பதிராஜ | இல. 32, பலகல்லவத்த, நாரஹ்கல்ல, கிதலவ |
| 29 | திரு. ஜே.எம். தயாரத்ன | குலபடவத்த, ஹொரொம்பாவ, வாரியபொல |
| 30 | திரு. பீ.ஆர். அபயவிக்ரம பண்டார | தெனிய, பனலிய, பொல்கஹவெல |

ஆணைக்குழுவின் கட்டளைப்படி

ரேணுகா பி. விஜேரூப,
செயலாளர்,
கூட்டுறவு சேவை ஆணைக்குழு (வடமேல்).

புதிய மாகாண சபை கட்டடத் தொகுதி,
இரண்டாம் மாடி, குருநாகல்.
தொ.பே. இலக்கம் : 037-2228151 /037-2233853

06-54

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு**

**வடமேல் மாகாணத்தின் மாகாண சபைப் பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆங்கில ஆசிரிய வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரிய சேவையில் 3 -1 (இ) தரத்திற்கு மாவட்ட அடிப்படையில் டிப்ளோமா பட்டதாரிகளை சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018**

2019.01.26 ஆந் திகதி நடாத்தப்பட்ட எழுத்து மூலமான பரீட்சையினை இரத்து செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2099 ஆம் இலக்கத்தினால் 2018.11.23 ஆந் திகதிய வர்த்தமானியில் பகுதி IV (அ) மாகாண சபை பகுதியில் பிரசுரிக்கப்பட்ட வடமேல் மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆங்கில ஆசிரிய வெற்றிடத்திற்காக இலங்கை ஆசிரிய சேவையில் 3-1 (இ) தரத்திற்கு மாவட்ட அடிப்படையில் டிப்ளோமா பட்டதாரிகளை சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018, இப் பரீட்சை அறிவித்தலுக்கு அமைய 2018.12.31 ஆந் திகதிக்கு விண்ணப்பப்படிவம் கோரப்பட்டு 2019.01.26 ஆந் திகதி நடாத்தப்பட்ட எழுத்து மூலமான பரீட்சையினை இத்தால் இரத்து செய்கின்றேன்.

02. மேற்கூறப்பட்ட வர்த்தமானிக்கு அமைய விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2111 ஆம் இலக்கத்தினால் 2019.02.15 ஆந் திகதிக்கு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பரீட்சை அறிவித்தலுக்கு அமைய விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்காக மாத்திரம் மீண்டும் பரீட்சையினை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ் விண்ணப்பதாரிகளுக்காக பரீட்சை அனுமதிப் பத்திரம் மீண்டும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஆர். எம். ஆர். எம். ரத்நாயக்க,
செயலாளர்,
வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2019, மே 31.

06-534

**மத்திய மாகாண அரசாங்க சேவையில் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2019**

மத்திய மாகாணத்தின் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தில் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவினைக் கொண்ட ஆண், பெண் இருசாராரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பொதுத் தகைமைகள்:-**

1.1 விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

1.2 சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

1.3 அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்யுமாறு இவ்வறித்தலில்/ வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும்.

1.4 ஒவ்வொரு பரீட்சார்த்தியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.5 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரர் 21 வயதுக்கு குறையாதவராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

1.6 அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்யுமாறு இவ்வறித்தலில்/ வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகைமைகள் மற்றும் நிபந்தனைகளை எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**2. கல்வித் தகைமைகள்: -**

இங்கு குறிப்பிட்டுள்ள அனைத்து தகைமைகளையும் 2019.07.15 ஆம் திகதிக்கு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டங்கள் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

**3. சம்பள அளவுத்திட்டம் :**

பொது நிருவாக சுற்று நிருபம் 03/2016 இன் MN-4-2016 சம்பளத் தொகுதிக்கமைய மத்திய மாகாண அரசாங்க சேவையில் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.

ரூபா. 31,490.00 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 5 x 750 = ரூபா. 54,250.00

( பொது நிருவாக சுற்று நிருபம் 03/2016 இன் உப அட்டவணை II இன் ஏற்புகளுக்கமைய 2019.01.01 ஆம் திகதிக்கான சம்பளம் ரூபா 28,235.00 ஆகும். இச் சுற்றறிக்கையின் ஏற்புகளின் அடிப்படையில் சம்பளங்கள் வழங்கப்படும்)

**4. ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :-**

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இப்பதவியுடன் தொடர்புடைய ஆட்சேர்ப்பு திட்டத்திற்கமைய ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

**5. ஆட்சேர்ப்பு முறை:-**

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய வெற்றிட எண்ணிக்கைகளுக்கு சமமான எண்ணிக்கையினர் நேர்முகப்பரீட்சையொன்றிற்கு அழைக்கப்படுவதுடன் எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் தனித்தனியாக குறைந்தது 40% புள்ளிகளைப் பெறாத விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பு செய்வதற்காக கவனத்தில் கொள்ளப்படமாட்டார்கள். நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சித்ததன் பின்னர் போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் திறமை அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

**6. சேவை நிபந்தனைகள் :-**

6.1 இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்.

6.2 அரச கரும மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சுற்றறிக்கைகளின் ஏற்புகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

**7. விண்ணப்பிக்கும் முறை:-**

7.1 அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணமான ரூபா 600 இனை மத்திய மாகாண சபையின் பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவுவைக்கும் பொருட்டு மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள செலுத்தப்படமாட்டாது.

7.2 இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் "செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி" என்ற முகவரிக்கு 2019.07.15 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "மத்திய மாகாண அரசாங்க சேவையில் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் -2019" எனக் குறிப்பிடல் வேண்டும். அத்துடன் பதிவு மாவட்டத்திற்குறிய குறியீட்டு இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும், முழுமையுறாத மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூற மாட்டாது.

**8. பரீட்சை ஊடகம்**

இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலத்தின் சரியான குறியீட்டினை தெளிவாக விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**9. பரீட்சை நிலையம்**

பரீட்சை நிலையங்கள் அமையும் இடம் பற்றி மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

**10. பரீட்சை செயற்றிட்டம் : -**

உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பதாரிகள் பின்வரும் பரீட்சை செயற்றிட்டத்தின் கீழ் எழுத்து மூலப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

10.1 **நுண்ணறிவும் பொது உளச்சார்பும் : -** (ஒரு மணித்தியாலம்) (உச்ச புள்ளிகள் - 100) (சித்திடைவதற்கான புள்ளிகள் 40%) பரீட்சார்த்திகளின் மொழித்திறன், கணிதத் தேர்ச்சி, தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பொது உளச்சார்பு தொடர்பான அறிவினை மதிப்பிடும் வகையில் தயாரிக்கப்பட்ட சிறு மற்றும் பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாகும்.

10.2 **பொது அறிவும் துறை சார் அறிவும் : -** (காலம் 02 மணித்தியாலங்கள்) (100 புள்ளிகள்) (சித்திடைவதற்கான புள்ளிகள் 40%)

இங்கு சமூக அபிவிருத்தி தொடர்பான துறை சார் அறிவு, மற்றும் தற்போதைய சமூக அரசியல் தகவல்கள்

உள்ளடங்களான அறிவினை ஆராயும் நோக்கில் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாக்கள், அமைப்புக் கட்டுரைகள், கட்டுரைகள் உள்ளடங்கிய வினாக்களைக் கொண்டதாகும்.

**11. விண்ணப்பங்கள் நிரப்பியனுப்புவதற்கான அறிவுறுத்தல்கள் : -**

இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய ஏ4 அளவு தாளின் இரு பக்கங்களையும் பாவித்து அதன் முதலாவது பக்கத்தில் இல. 1-5 வரையான விடயங்களையும் மிகுதி மற்றைய பக்கங்களில் உள்ளடக்கியதாக விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சு செய்து அல்லது தெளிவான கையெழுத்தினால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் பூரணப்படுத்தும் போது கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீட்டு எண்களை பொருத்தமான கூடுகளில் இடவேண்டும்.

11.1 விண்ணப்பிக்கும் மாவட்டங்கள் என குறிப்பிடவேண்டியது விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டமாகும். மாவட்டங்களின் குறியீட்டு இலக்கங்கள் பின்வருமாறு

கண்டி - 01

மாத்தளை - 02

நுவரெலியா- 03

11.2 விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு அல்லது பொது நிருவாக சுற்று நிரூபம் 03/2016 இல் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட நிலை மட்டத்தில் அரச அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவரினால் சான்றுப்படுத்தல் வேண்டும்.

11.3 நியமனம் வழங்க முன், வழங்கிய பின், அல்லது யாதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் யாதாயினும் விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகுதியற்றவரென உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத்தன்மை அல்லது நியமனம் இரத்து செய்யப்படும். மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்த உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருப்பதாக அவர் நியமனம் செய்யப்பட்டதன் பின் உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

11.4 தற்போது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

12. இப்பரீட்சையை நிகழ்த்துதல், நிகழ்த்திய பின் தெரிவு செய்தல், தெரிவு செய்யாதிருத்தல், வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய விளக்கமளித்தல், இவ்வறிவித்தலில் வெளியாகாத வேறு விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் என்பன மத்திய மாகாண அரசசேவை ஆணைக்குழுவிற்குறியதாகும்.

எம்.ஜீ.ஏ. திலகரத்ன

செயலாளர்,

மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

மத்திய மாகாண சபை.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,

இல 244, கடுகஸ்தோட்டை வீதி,

கண்டி.

2019, யூன் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரசாங்க சேவையில் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019**

Competitive Examination for Recruitment to the post of Community Development Officer Grade III to Central Provincial Public Service- 2019

பரீட்சை இலக்கம்: [ ]
( அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : [ ] (சிங்களம் -S, தமிழ் – T, ஆங்கிலம் – E )

( உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடவும்)

வதிவிட மாவட்டம் [ ] மாவட்டத்துக்குரிய குறியீட்டு இல:- [ ]

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : ........................................................................................................
Mr./Mrs./Miss ( ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் : ........................................................................................................
திரு./திருமதி/செல்வி. (சிங்களத்தில்/தமிழில்)

1.3 முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): ..................................
..........................................................................................................................................

1.4 முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ..................................................
..........................................................................................................................................

02. 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்): ........................................................................................
..........................................................................................................................................

2.2 பிரவேச அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (சிங்களத்தில்/தமிழில்): ................................................
..........................................................................................................................................

2.3 பிரவேச அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ...................................
..........................................................................................................................................

2.4 தற்போது அரச சேவையில் இருப்பவராயின் அலுவலக முகவரி: ..........................................................
..........................................................................................................................................

2.5 கையடக்கத் தொலைபேசி இலக்கம் :...................................................................

03. 3.1 பிறந்த திகதி : ...................................................................................

3.2 விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதிக்கு (2019.07.15) வயது :
வருடங்கள் : ........... மாதங்கள் : ......... நாட்கள் : ..................

3.3 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

04. பால் (ஆண் -0, பெண்- 1) : [ ]

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

05. நிரந்தர வதிவிட மாவட்டம் : ………………………

| வாக்காளர் இடாப்புப் பட்டியலின் அடிப்படையில் | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| தேர்தல் மாவட்டம் | | | |
| தேர்தல் தொகுதி | | | |
| வாக்காளர் பிரிவு | | | |
| கிராம அலுவலர் பிரிவு இல. | | | |
| வீட்டு இல. | | | |
| பெயருக்கு முன்னாலுள்ள தொடரிலக்கம் | | | |

06. கல்வித் தகைமைகள் : -

| *பல்கலைக்கழகம்* | *பெற்றுள்ள பட்டம்* | *சான்றிதழ் இலக்கம் மற்றும் பட்டம் செல்லுபடியாகும் திகதி* |
|---|---|---|
| | | |

07. பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் தொடர்பான விபரம் :

(i ) பணம் செலுத்திய பிரதேச செயலகம் : ……………………………………………………………

(ii ) திகதி : ……………………………………………………………

(iii ) பற்றுச்சீட்டின் இலக்கம் : ……………………………………………………………

(பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும்)

08. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

……………………………………………

திகதி : ……………………… விண்ணப்பதாரியின் கையொப்பம்

**09.** விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணபப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி ………………………………. என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் இன்று என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………………

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி : ………………………

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் : ……………………………………………

பதவி : ……………………………………………

முகவரி : ……………………………………………

( உத்தியோக முத்திரையால் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

**10.** அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது சேவையிலிருக்கும் விண்ணப்பதாரி எனின், திணைக்களத் தலைவரின் சான்றுரை :

இவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி. ……………………………………………………… என்பவர் இத் திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ……………………………………………… ஆக கடமையாற்றுகிறார். கடந்த 05 வருட காலப்பகுதியில் அவர் எந்த விதமான ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என்பதை தெரிவிப்பதுடன் மேற்குறிப்பிடப் பட்டுள்ள பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படின் அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்றும் ஒப்புதல் அளிக்கின்றேன்.

………………………………………………………

திணைக்களம்/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி: ………………………………

06-574

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

***2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***

***“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை”***

***(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)***

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

*1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.*

*2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

*3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.*

*4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.*

*5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், “பொரல்லை” என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.*

*6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.***

*8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் ‘சுப்றீம் கோட்’ புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.*

*10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-*

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

*11.* **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

*12.* **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் “அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8” அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

*13.* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி கிடைக்கப் பெறாமை முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகர் என்ற முகவரிக்கு அறிவியுங்கள்**

*14.* **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2019**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 07.06.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.05.2019 |
| | | வெள்ளி | 14.06.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.05.2019 |
| | | வெள்ளி | 21.06.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.06.2019 |
| | | வெள்ளி | 28.06.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.06.2019 |
| **யூலை** | .. | வெள்ளி | 05.07.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.06.2019 |
| | | வெள்ளி | 12.07.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.06.2019 |
| | | வெள்ளி | 19.07.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.07.2019 |
| | | வெள்ளி | 26.07.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.07.2019 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 02.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.07.2019 |
| | | வெள்ளி | 09.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.07.2019 |
| | | வெள்ளி | 16.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.08.2019 |
| | | வெள்ளி | 23.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.08.2019 |
| | | வெள்ளி | 30.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.08.2019 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.